| F–8754 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA1C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                Maximum : 75 Marks

**பகுதி அ**                ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. ‘ஆடிவரும் தேனே’ என்று பாரதியார் யாரைக் குறிப்பிடுகிறார்?

2. பாரதி தாசன் – குறிப்பு வரைக.

3. தனது பேனாவை இயக்கும் சக்திகளாக இன்குலாப் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

4. இட்லிப் புத்திரர்கள் குறித்து நா. முத்துக்குமார் கூறுவது யாது?

5. ‘ஒரு பறவையின் வாழ்வு’ - சிறுகதையின் கதைக்கரு யாது?

6. வண்ணதாசனின் படைப்புகள் இரண்டினை எழுதுக.

7. இமாவதிக்குத் தாய் கூறிய அறிவுரை யாது?

8. மு. வரதராசனாரின் எழுத்துக்கள் எவற்றை மையமிட்டவை?

9. முக்திக்கானப் பாதையாக விவேகானந்தர் கூறுவது யாது?

10. ‘சமயக் கோட்பாடு’ பற்றி எழுதுக.

### பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மாங்கனியைப் பிரிந்த அடலேறுவின் செயல்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் 'புறாக்கள்' கவிதை உணர்த்தும் கருத்துக்கள் யாவை?

12. (அ) 'குளிர்ந்த நெருப்பு' கவிதை பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'தெரு விளக்கு' கவிதை புலப்படுத்தும் செய்திகள் யாவை?

13. (அ) 'ஒரு தாமாரைப்பூ, ஒரு குளம்' - கதைக் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பூரணம்' கதையில் இடம்பெறும் பூரணலிங்கத்தின் பாத்திரப் படைப்பு குறித்து எழுதுக.

14. (அ) 'அகல் விளக்கு' - புதினத்தில் இடம்பெறும் வரதட்சணை குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சந்திரனின் இறுதிக்கால வாழ்வு குறித்தெழுதுக.

15. (அ) 'திருவாசகம் ஓதுவோம்' – கட்டுரை உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'பொன்னம்பல அடிகளார்' குறித்து எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாரதியின் 'கண்ணம்மா' கவிதைக் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

17. நா. முத்துக்குமாரின் 'பட்டாம்பூச்சி விற்பவன்' கவிதையில் இடம்பெறும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

18. 'நிரப்புதல்' சிறுகதையைத் திறனாய்க.

19. 'அகல் விளக்கு' - புதினத்தின் கதைப்பின்னல் பற்றிக் கட்டுரைக்க.

20. 'மனிதகுல மாணிக்கம்' – கட்டுரை குறித்து விவரிக்க.

**F–8755**

| Sub. Code |
|---|
| 7BTA1C2 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2023

**First Semester**

**தமிழ்**

**இலக்கணம்–நன்னூல்–எழுத்து**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　　$(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நூல்களின் வகைகள் யாவை?

2. நன்னூலார் கூறும் குற்றங்கள் எத்தனை?

3. மெய்ம்மயக்கம் என்றால் என்ன?

4. மேற்பல் இதழ் உற பிறக்கும் எழுத்து எது?

5. பதம் எத்தனை வகைப்படும்?

6. இறந்த கால இடைநிலைகள் யாவை?

7. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?

8. ‘சுவைப்புளி முன் இனமென்மையும் தோன்றும்’ – விளக்குக.

9. ‘ஊன்’ எனும் சொல்லின்முன் வேற்றுமை வந்து புணரின் என்னாகும்?

10. வடகிழக்கு புணர்ச்சி முறை யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாயிர இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) உரையினது பொது இலக்கணம் பற்றி எழுதுக.

12. (அ) குற்றியலுகரம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) போலி என்றால் என்ன? வகைகளைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) காலம் காட்டும் விகுதிகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.

14. (அ) உயிரீற்றின் வல்லினம் வரின் புணர்ச்சியில் எவ்வாறு வரும்?

(அல்லது)

(ஆ) தெங்கு+காய் – ? விளக்குக.

15. (அ) 'தனிக்குறில் முன் ஒற்று வரின் இரட்டும்' – விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ஆ மா கோனவ் வணையவும் பெறுமே' – விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆசிரியர் இலக்கணம், இயல்பு, பாடம் சொல்லும் முறைமை பற்றிய நன்னூலார் கருத்துக்கள் யாவை?

17. மொழி முதல், மொழி இறுதி எழுத்துக்கள் பற்றி விளக்குக.

18. வடமொழியாக்கம் பற்றி விளக்குக.

19. உயிரீற்றுப் புணரியல் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

20. உருபுப்புணரியல் செய்திகள் யாவை?

———————

| F–8756 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA2C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Second Semester**

**தமிழ்**

**பக்தி இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கோளறு திருப்பதிகத்தை இயற்றியவர் யார்?

2. திருவையாறில் எழுத்தருளியுள்ள இறைவனின் திருநாமத்தைக் குறிப்பிடுக.

3. திருத்தொண்டர் தொகையில் பாடப்பட்டுள்ள அடியார்களின் எண்ணிக்கையை எழுதுக.

4. திருப்பள்ளி எழுச்சி என்றால் என்ன?

5. திருப்பாவையில் போற்றிப்பாடப்படும் இறைவன் யார்?

6. பெரியாழ்வாரின் பெற்றோர்களின் பெயரைக் குறிப்பிடுக.

7. இரட்சண்ய யாத்திரிகம் எம்மதத்தோடு தொடர்புடையது?

8. 'குணங்குடி மஸ்தான் சாகிபு' இயற்பெயரைச் சுட்டுக.

9. திருவருட்பா திருமுறைகள் எத்தனை பகுதிகளைக் கொண்டது?

10. கேடிலியப்பர் - கெசவல்லி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தவர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோள்களைப்பற்றி கோளறு பதிகம் கூறும் செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருவையாறில் வீற்றிருக்கும் இறைவனை அப்பர் எவ்வாறு போற்றுகிறார்.

12. (அ) திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடப்படும் பெண் அடியார்களைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகரின் இறைவணக்கத்தைப் புலப்படுத்துக.

13. (அ) திருப்பாவைப் பாடல்களில் ஆண்டாளின் இலக்கிய நயத்தைக் காட்சிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பெரியாழ்வாரின் தாயுள்ளத்தைப் புலப்படுத்துக.

14. (அ) உலகம் மகிழ்வுற எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குணங்குடி மஸ்தான் சாகிபின் பக்தி நெறியை எடுத்தியம்புக.

15. (அ) வள்ளலார் இறைவனிடம் வேண்டுவன யாவை?

(அல்லது)

(ஆ) இறைவனின் கருணையாக தாயுமானவர் கூறுவதைத் தொகுத்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருநாவுக்கரசரின் இறைப்பணிகளை விரித்தெழுதுக.

17. இறைவனைத் துயில் எழுப்பும் மாணிக்கவாசகரின் திறனை விளக்கியெழுதுக.

18. திருப்பாவைப் பாடல்களில் கண்ணனின் பெருமைகளாக ஆண்டாள் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

19. பராபரக் கண்ணியில் குணங்குடி மஸ்தான் சாகிபின் பக்தி நெறியைப் புலப்படுத்துக.

20. சோதியே சுகவாரியே என தாயுமானவர் இறைஞ்சுவதைக் காட்சிப்படுத்துக.

| F–8757 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA2C2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கணம் –நன்னூல் – சொல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மூவகை மொழிகள் யாவை?

2. குரிசில், தோன்றல் – எவ்வகைப் பெயர்?

3. இரண்டாம் வேற்றுமை உருபு யாது?

4. விளி வேற்றுமை உருபுகளுள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

5. முற்றுவினை என்றால் என்ன?

6. 'எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்' விளக்குக.

7. வேற்றுமைத் தொகை என்றால் என்ன?

8. வினா எத்தனை வகைப்படும்?

9. மா என் கிளவி–வுன்ன இடைச் சொல்?

10. நாலறிவு உயிர்கள் எவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நன்னூலாரின் சொற்பாகுபாடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பால்பகா அஃறிணைப் பெயர்கள் - விளக்குக.

12. (அ) உருபு மயக்கத்தை விளக்கிச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) விளி உருபு ஏலாய் பெயர்கள் யாவை? விளக்குக.

13. (அ) வியங்கோள் வினைமுற்று – விளக்குக.

(அல்லது)

(ஆ) வினையெச்ச வாய்பாடுகளைப் பட்டியலிடுக.

14. (அ) பத்துவகை எச்சங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோளை விளக்கிச் சான்று தருக.

15. (அ) எல்லா விடத்தும் வரும் அசைச் சொற்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆறறிவு உயிர்கள் பற்றி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆகுபெயர் என்றால் என்ன? வகைகளை விளக்கிச் சான்று தருக.

17. வேற்றுமை உருபின் வகைகளை விளக்குக.

18. வினைமுற்றுக்களை விளக்கிச் சான்று தருக.

19. விடை எத்தன வகைப்படும்? விளக்குக.

20. தொல்காப்பியரின் உரியியல் கோட்பாடு யாது? விளக்குக.

———————

| F–8758 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA2C3 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Second Semester**

**தமிழ்**

**தமிழக வரலாறும் பண்பாடும்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. தமிழகத்தின் வட எல்லை எது?

2. இந்தியாவுக்கு வந்த அயல் நாட்டுப் பயணிகள் இருவரைக் குறிப்பிடுக.

3. எத்தனை சங்கங்கள் இருந்தன?

4. இரட்டைக் காப்பியங்கள் எவை?

5. களப்பிரர்கள் தமிழகத்தின் எப்பகுதியை ஆண்டனர்?

6. இராஜராஜன் கட்டிய பிரகதீஸ்வரர் ஆலயம் எவ்வூரில் உள்ளது?

7. பாண்டியர்களின் தலைநகரம் எது?

8. விஜய நகரப் பேரரசர்களில் குறிப்பிடத் தகுந்த அரசர் யார்?

9. சிப்பாய்க் கலகம் எங்கு நடந்தது?

10. தமிழ்ப் பல்கலைக் கழகம் எங்கு உள்ளது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழகம் கீழை நாட்டுடன் கொண்டிருந்த தொடர்பை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் புதை பொருள் ஆய்வு நிகழ்ந்த இடங்கள் யாவை?

12. (அ) எட்டுத்தொகை நூல்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) எண் பேராயம் – குறிப்பு வரைக.

13. (அ) ஆழ்வார்கள் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) நரசிம்ம வர்மபல்லவனின் பல்துறைத் திறமையை விளக்குக.

14. (அ) இராணி மங்கம்மாள் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பாண்டியர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

15. (அ) ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியாவில் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் புதைபொருள் நடந்தமை குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் பற்றி அறியலாகும் உண்மைகள் குறித்துக் கட்டுரைக்க.

17. சங்ககால அரசு நிர்வாகம் பற்றி விவரி.

18. சோழர்காலச் சமய நிலையை விளக்குக.

19. நாயக்கால ஆட்சி முறையை விளக்குக.

20. இந்திய சுதந்திரத்திற்குத் தமிழர்களின் பங்கு பற்றி எழுதுக.

| F–8759 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA3C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Third Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    ($10 \times 2 = 20$)

அனைத்து வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு எது?

2. அம்புலிப்பருவம் பிள்ளைத்தமிழில் எத்தனையாவது பருவம்?

3. அபிராமி அந்தாதியின் ஆசிரியர் யார்?

4. 'நின்றும், இருந்தும் கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை' என்ற தொடரில் 'உன்னை' என்பது யார்?

5. முதல் பரணி நூல் எது?

6. யார்மீது தமிழைத் தூது விடுக்கிறார், ஆசிரியர்?

7. "பள்ளு" – இலக்கணம் எழுதுக.

8. குற்றாலக் குறவஞ்சி நூலின் ஆசிரியர் யார்?

9. 'குலோத்துங்க சோழன் உலா' ஆசிரியர் யார்?

10. நந்திவர்மன் எந்த வம்சத்து மன்னன்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பிள்ளைத்தமிழ் இலக்கிய வகை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வருகைப் பருவச் சிறப்புக்கள் யாவை? விளக்குக.

12. (அ) அபிராமி அம்மையின் சிறப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) அந்தாதி இலக்கியம் பற்றிக் குறிப்பு வரைக.

13. (அ) காடு பாடியதன் பொருண்மை யாது? விவரி.

(அல்லது)

(ஆ) தமிழ் விடு தூது நூலில் எழுத்து பற்றி அமைப்பும் செய்திகளை எழுதுக.

14. (அ) சிங்கி அணிந்துள்ள ஆபரணங்களைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பள்ளு இலக்கியத்தின் சிறப்பினை விவரி.

15. (அ) குலோத்துங்கனின் சிறப்பினை எழுதுக.

(அல்லது)

(ஆ) நந்திவர்மன் சிறப்பினை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மீனாட்சியம்மையின் சிறப்புக்களைப் பிள்ளைத் தமிழ் வழி விளக்குக.

17. அபிராமி அந்தாதியின் வழி அம்மையின் சிறப்புக்களை விவரி.

18. தமிழ் விடுதூது நூலில் இடம் பெறும் திருவிளையாடல்ச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

19. குறவஞ்சி இலக்கியம் பற்றி விவரித்துக் குற்றாலக் குறவஞ்சியின் சிறப்பினை எழுதுக.

20. குலோத்துங்கச் சோழன் உலா வரி அறியலாகும் அகமரபுச் செய்திகளை எழுதுக.

———————

| F–8760 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA3C2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Third Semester**

**தமிழ்**

**நம்பியகப் பொருள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பொருந்தாக் காமம் எவ்வாறு சுட்டப்படுகிறது?

2. இருவகைப் பாங்கர் யார்? யார்?

3. ஐயம் என்றால் என்ன?

4. இரவுக்குறி என்றால் என்ன?

5. இல்வாழ்க்கை என்றால் என்ன?

6. தூதிற் பிரிவு என்றால் என்ன?

7. நற்றாய் கூற்று நிகழாத இடம் எது?

8. மெய்ப்பாடு எத்தனை வகைப்படும்?

9. உவமயின் வகைகள் யாவை?

10. அகப்பாட்டுத் தலைமக்களுக்குக் கூறப்படும் பெயர்கள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாலை நிலத்திற்குரிய கருப்பொருள்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) கற்பின் வகைகள் எத்தனை? விளக்குக.

12. (அ) இடந்தலைப்பாடு என்றால் என்ன? வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வரைவு கடாவுதல் என்பதனை விளக்குக.

13. (அ) வரைவிற்கு உரிய கிளவித்தொகைகள் எத்தனை? விளக்குக.

(அல்லது)

(ஆ) மீட்சியின் வகைகளை எழுதுக.

14. (அ) களவில் கூற்றுக்கு உரியவர்கள் யார்? யார்?

(அல்லது)

(ஆ) இடம், காலம் பற்றி ஒழிபியல் கூறுவனவற்றை விளக்குக.

15. (அ) இறைச்சி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) துறை பற்றி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பிரிவின் வகைகளை விளக்கி உரைக்க.

17. வரைதல் வேட்கையினை விளக்குக.

18. கற்பியல் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. ஒழிபியல் குறிப்பிடும் கூற்று பற்றிய செய்திகளைத் தருக.

20. அகப்பாட்டினுள் தலைமக்கள் வருந்திறனை வரைக்க.

| F–8761 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA4C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Fourth Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. புகார் நகரின் இரு பெரும்பிரிவுகள் யாவை?

2. மணிமேகலையின் ஆசிரியர் யார்?

3. பவித்திர குமாரன் எனச் சீவகனைப் பாராட்டியது யார்?

4. பதுமையின் தந்தை யார்?

5. கம்பராமாயணத்தின் காண்டங்கள் எத்தனை?

6. இராமனுக்குக் குகன் எத்தனையாவது சகோதரன்?

7. பரஞ்சோதியார் எந்த வடநாட்டு நகரத்தோடு போர் புரிந்தார்?

8. சிறுத்தொண்டர் வீட்டில் உள்ள பணிப்பெண் பெயர் யாது?

9. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்?

10. செங்கடலைப் பிரித்து இஸ்ராயேலருக்கு வழியமைத்தவர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குறவரின் வினாவிற்குக் கண்ணகி அளித்த விடை யாது?

(அல்லது)

(ஆ) ஆபுத்திரனின் பிறப்பு, வளர்ப்பு பற்றி விளக்குக.

12. (அ) சீவக சிந்தாமணி எச்சமயம் சார்ந்தது? பதுமையார் இலம்பகத்தின் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பதுமையார் இலம்பகத்தில் சீவகன் கூறிய அறிவுரை யாது?

13. (அ) குகனது தோற்றச் சிறப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) குகனது அன்பின் திறத்தைக் கம்பர் எவ்வாறு விளக்குகிறார்?

14. (அ) சிறுத்தொண்டரது அரசப் பணியை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிவபெருமான் என்ன வடிவில் சிறுத்தொண்டர் இல்லம் வந்தார்? விவரி.

15. (அ) எருசலேம் நகரச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) கதீஜா கண்ட கனவு யாது?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. வேட்டுவ வரிச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. சீவகன் பதுமையார் திருமண நிகழ்வைத் திருத்தக்கதேவர் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

18. குகனுக்கும் இராமனுக்கும் நிகழ்ந்த உரையாடலை எழுதுக.

19. சிறுத்தொண்டரது பக்தித் திறத்தை விவரி.

20. மகன் நேர்ந்த படலத்தின் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

———————

| F–8762 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA4C2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Fourth Semester**

**தமிழ்**

**இலக்கணம் – புறப்பொருள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஒரிருவரிகளில் விடையளிக்க.

1. உண்டாட்டுத்துறை – சிறுகுறிப்பு வரைக.

2. பிள்ளையாட்டு என்றால் என்ன?

3. பேராண் வஞ்சி – விளக்கம் தருக.

4. காஞ்சித்திணையை குறிப்பிடுக.

5. குதிரைமறம் என்றால் என்ன?

6. பாசிநிலை – விளக்குக.

7. முன்தேர் குரவை என்றால் என்ன?

8. வேந்தனின் செங்கோல் சிறப்பை எடுத்துரைக்கும் துறை யாது?

9. நாள் மங்கலம் என்றால் என்ன?

10. குடைமங்கலம் – குறிப்பு வரைக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வெட்சிப்படலத்தின் துறைவகைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஆகோள், பூசல்மாற்று ஆகிய துறைகளை சான்றுடன் எழுதுக.

12. (அ) எல்லை காத்தல் போரின் துறைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தொட்ட காஞ்சி, தொடாக்காஞ்சி – குறிப்பு வரைக.

13. (அ) நொச்சித்திணையின் துறை வகைகளை நூற்பாதந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மறனுடைப்பாசி, ஊர்ச் செருப் போரினை சான்றுடன் தருக.

14. (அ) தானை, யானை, குதிரை மறம் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) முன் தேர், பின்தேர், பேய்க்குரவைத் துறைகளை விளக்குக.

15. (அ) மங்கலநிலை, விலக்குநிலைத் துறையினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) பாடாண்படலத்தில் இடம் பெற்றுள்ள ஆற்றுப்படைத் துறைகளை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கரந்தைத் திணையின் துறைகளை நுற்பாதந்து விவரி.

17. மண்ணாசைப் போர்த்திறத்தினை தொகுத்துரைக்க.

18. உழிஞைத் திணையின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விவரி.

19. பாலைத்திணைக்குப் புறம்பான திணையினைக் கூறி வகைகளை விவரி.

20. குடை, வாள், மண்ணு மங்கலத்தையும் ஓம்படைத் துறையினையும் சான்றுடன் விளக்குக.

———————

| F–8763 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA5C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Fifth Semester**

**தமிழ்**

**அறஇலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நல்லவர் நட்பும், தீயவர் நட்பும் எத்தகையது?
2. வன்மையுள் எல்லாம் தலை எது?
3. நாலடியாரில் எத்தனை பாடல்கள் உள்ளன?
4. காஞ்சிரங் காழ் - பொருள் கூறு.
5. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் யார்?
6. வெற்றிவேற்கையின் வேறுபெயர் யாது?
7. செல்வர்க்கு அழகு எது?
8. யானைக்கு எது இல்லை?
9. மெய்வருத்தம் பாரார், யார்?
10. நன்னெறியின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) நட்பிற்கு இலக்கணம் யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) யாருடன் நட்புக் கொள்ளக் கூடாது?

12. (அ) 'பிரிய பிரியுமாம் நோய்!' - விளக்குக.

(அல்லது)

(ஆ) பட்டினம் பெற்ற கலம் போல இன்பம் எப்பொழுது வரும்?

13. (அ) சிறந்த பத்து எவையெவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஔவையார் கூறும் மூதுரைச் செய்திகளை விளக்குக.

14. (அ) வெற்றி வேற்கை கூறும் அழகுகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) எவற்றை வெற்றி வேற்கை இல்லை எனக் குறிப்பிடுகிறது?

15. (அ) வாழைமரத்தின் வழி நன்னெறி கூறும் அறம் யாது?

(அல்லது)

(ஆ) பிற உறுப்பைக் கண்டு கலங்கும் கண்போன்று பெரியோர் செய்யும் செயல் யாது?

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. நட்பாராய்தலின் தேவையைக் குறள் வழி விளக்குக.

17. நாலடியார் அறிவுடைமை பற்றிக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

18. முதுமொழிக்காஞ்சி கூறும் அறக்கருத்துக்களைப் பாடப்பகுதி வழி விளக்குக.

19. வெற்றிவேற்கை கூறும் அறங்களைத் தொகுத்து எழுதுக.

20. குமரகுருபரர் கூறும் நீதிகளைப் பாடப்பகுதி வழி விளக்குக.

———————

**F–8764**

**Sub. Code**
**7BTA5C2**

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2023

**Fifth Semester**

**தமிழ்**

**இலக்கணம் – யாப்பு - யாப்பருங்கலக்காரிகை**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. யாப்பருங்கலக்காரிகை எத்தனை இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது?

2. 'தேமா' வாய்பாட்டிற்கு உரிய அசைகள் யாவை?

3. கலித்தளையை விளக்குக.

4. அளவடி என்றால் என்ன?

5. வெண்பாவிற்கு உரிய ஓசை எது?

6. சிந்தியல் வெண்பாவிற்கு எத்தனை அடிகள்?

7. சுரிதகம் - பொருள் தருக.

8. கலித்துறை என்றால் என்ன?

9. ஒற்று அளயாய் விடின் என்னாகும்?

10. வனப்பு எத்தனை வகைப்படும்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) நேரசை, நிரையசைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றியலிகரம் என்றால் என்ன? சான்று தருக.

12. (அ) பாவிற்கான அடிஅளவினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) அந்தாதித் தொடை என்றால் என்ன? விளக்குக.

13. (அ) பஃறொடை வெண்பா என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) குறள் வெண்செந்துறையை விளக்குக.

14. (அ) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா - இரண்டையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) மருட்பா என்றால் என்ன? விளக்குக.

15. (அ) அசைக்குப் புறனடையாகும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) கூன் - விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

**எவையேனும் மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சீர் என்றால் என்ன? விளக்கிச் சான்று தருக.

17. தொடை விகற்பம் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

18. ஆசிரியப்பாவின் வகைகளையும் இனங்களையும் விளக்குக.

19. வஞ்சிப்பா என்றால் என்ன? அதன் இனங்களை விளக்குக.

20. அடிக்கும் தொடைக்குமான புறனடைச் செய்திகளைத் தொகுத்துக் கூறுக.

| F–8765 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA5C3 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fifth Semester**

தமிழ்

தமிழ் இலக்கிய வரலாறு

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. தமிழ் எந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது?

2. தமிழ்ச் செம்மொழி இலக்கியங்களில் இடம்பெறும் இலக்கண நூல்கள் யாவை?

3. சேர மன்னர்கள் பற்றிய எட்டுத்தொகை நூல் எது?

4. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்?

5. பன்னிரு திருமுறைகள் எச்சமயம் சார்ந்தவை?

6. சூளாமணிக் காப்பியம் எச்சமயம் சார்ந்தது.

7. சிவஞானபோதம் யாரால் எழுதப்பட்டது?

8. தமிழின் முதல் நாவல் எது?

9. இராவணகாவியம் நூலின் ஆசிரியர் யார்?

10. ‘வேலைக்காரி’ நூலின் ஆசிரியர் யார்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திராவிட மொழிக் குடும்பம் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) செம்மொழிகள் பற்றி விளக்குக.

12. (அ) குறுந்தொகை-குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அகம் பற்றிய நூல்கள் பற்றி விளக்குக.

13. (அ) எட்டாம் திருமுறை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐம்பெருங்காப்பியங்கள் யாவை? விளக்குக.

14. (அ) அருணகிரிநாதர் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டினை விளக்குக.

15. (அ) உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் பணிகள் யாவை?

(அல்லது)

(ஆ) சாகித்ய அகடாமி விருது பெற்ற தமிழ் நூல்கள் பற்றி எழுதுக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. செம்மொழியின் கூறுகளையும், சிறப்புகளையும் விளக்கிக் கட்டுரை வரைக.

17. திருக்குறளின் அமைப்பையும் சிறப்பையும் விளக்குக.

18. சோழர்கால இலக்கண நூல்கள் பற்றிக் கட்டுரை வரைக.

19. தமிழ்ப் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விவரி.

20. உலகத் தமிழ் மாநாடுகள் பற்றி விவரி.

| F–8766 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE1A |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fifth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – மனித உரிமைகள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பன்னாட்டுச் சட்டவியல் பிதாமகர் யார்?

2. மனித உரிமைகள் என்றால் என்ன?

3. இந்திய அரசியல் நிர்ணயசபை எந்த ஆண்டு செயற்படுத்த தொடங்கியது?

4. இந்தியாவில் அடிப்படை உரிமைகளை அமுல்படுத்துபவை எவை?

5. இந்தியாவில் தேசிய மனித உரிமை ஆணையம் என்று தொடங்கப்பட்டது?

6. நீதிமன்றத்தில் தவறான சாட்சி அளித்தால் எந்தச் சட்டப் பிரிவில் தண்டனை அளிக்கப்படும்?

7. டெல்லி காவல் சாவு பற்றிக் கூறுக.

8. அஸ்ஸாம் ரைபிள்ஸ் படையினரால் குடிமக்கள் கொல்லப்பட்டது எம்மாநிலத்தில் நிகழ்ந்தது?

9. வாரண்டுகளின் வகைகள் யாவை?

10. பெயில் (பிணை) என்றால் என்ன?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உலக மனித உரிமைகள் பிரகடனம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மனித உரிமைகளின் வகைகள் யாவை? விளக்குக.

12. (அ) வாழ்வுரிமை என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) இந்திய அரசியல் அமைப்பின் சமன்மைக்கான உரிமைகள் பற்றி விளக்குக.

13. (அ) தேசிய மனித உரிமை ஆணைய நியமனங்களின் சிறப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) இராணுவம் சம்பந்தப்பட்டதான புகாரினை ஆணையம் எவ்வாறு செயற்படும்?

14. (அ) அகில இந்திய வானொலி ஒலிபரப்பிய செய்தியின் அடிப்படையிலான ஆணையத்தின் செயற்பாடு யாது?

(அல்லது)

(ஆ) அஸ்ஸாமில் மனித உரிமைகள் தினத்தன்று நடந்த காவல் துறை அத்துமீறலை விவரி.

15. (அ) வாரண்டு பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) எதிர்பார்ப்புப் பெய்ல்-குறிப்பு வரைக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மகளிர், அகதிகளின் மனித உரிமைகள் குறித்து எழுதுக.

17. இந்திய அரசியல் அமைப்பு குறிப்பிடும் குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகள் பற்றி எழுதுக.

18. ஆணையத்திற்கு உள்ள விசாரணை அதிகாரங்கள் பற்றி விளக்குக.

19. தேசிய மனித உரிமை ஆணையத்தின் செயற்பாடுகள் சிலவற்றைக் கூறுக.

20. கைது செய்யப்பட்டவர்களின் உரிமை பற்றி ஆய்க.

| F–8767 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE1B |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fifth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – பெண்ணியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　(10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஐக்கிய நாடு சபை அனைத்துலக மகளிர் ஆண்டாக அறிவித்த ஆண்டு எது?

2. பெண்ணிலை வாதம் எந்த நூற்றாண்டில் உருவானது கூறு.

3. வாஸந்தி எழுதிய நாவலின் பெயரைக் கூறு.

4. பெண்டிர்க்கு அழகு என ஆசிரியர் எதைக் கூறுகிறார்?

5. தொலைநிலைக் கல்வி தொடங்கப்பட்ட ஆண்டு எது?

6. UTF எந்தப் பயிற்சியை அளிப்பதன் வாயிலாகத் தனது சேவையை தொடங்கியது?

7. இந்திய வரலாற்றில் கருப்பு நாளாக வர்ணிக்கப்படுவது எது?

8. "வில்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்"-என்ற பாடலின் ஆசிரியர் யார்?

9. இஸ்லாத்தில் வரதட்சணை முறையை எவ்வாறு அழைப்பர்?

10. பத்தினிக் கோட்டம் என்னும் சொல்லாட்சி எத்தனை இடங்களில் பயின்று வந்துள்ளது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) பெண்ணியம் தோன்றுவதற்கான காரணங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்ணியப் புதிய பார்வை எவ்வாறு இருந்தது விளக்குக.

12. (அ) பெண் சிசுவதை தடுக்கும் வழிமுறைகள் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) பெண்ணே பெண்களுக்கு எதிரியாகிறாள்-ஆசிரியர் வழி நின்று கூறு.

13. (அ) மகளிரின் தொழில் நுட்பவியல் மையக் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தொலைநிலைக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி மகளிர் மேம்பாட்டிற்கு உதவிய விதத்தைக் கூறுக.

14. (அ) பெண்ணடிமைத்தனத்தை பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) பெண்கள் மீதான பார்வை சமூகத்தில் எவ்வாறு காணப்பட்டது கூறுக.

15. (அ) தொல்காப்பியம் கூறும் ஆண் பெண் தகுதிகள் யாவை?

(அல்லது)

(ஆ) சிலம்பில் 'பத்தினி' சொல்லாட்சி குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. பெண்கள் பேரெழுச்சி பெற்றமை குறித்து கட்டுரை வரைக.

17. பெண் மீதான வன்முறைக் கோட்பாடுகளை விவரித்து எழுதுக.

18. மகளிர் மேம்பாட்டின் பணியும் பங்கும் குறித்து கட்டுரை வரைக.

19. விடுதலைப் போரில் மகளிரின் பங்கு பற்றி எழுதுக.

20. பெண்ணின் திருமண உரிமைகள் பற்றி திருக்குரான் வழிநின்று விளக்குக.

———————

| F–8768 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE2A |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fifth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – கவின் கலைகள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. அழகுக்கலையின் வேறு பெயர்கள் யாவை?

2. பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட கோவில்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

3. இரண்டு வகைச் சிற்பங்கள் யாவை?

4. சித்திரகாரப்புலி-யார்?

5. பழந்தமிழ் இசைநூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

6. யாழ் நூலின் ஆசிரியர் யார்?

7. துடியாடல் என்றால் என்ன?

8. நானாவித நடனசாலை மண்டபம் எக்கோவிலில் இருந்தது?

9. அறிவினால் உணர்ந்து இன்புறத்தக்க கலை எது?

10. சீறாப்புராணம் எச்சமயம் சார்ந்தது?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குகைக் கோயில்-குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கற்றளி என்றால் என்ன? விளக்குக.

12. (அ) யவன நாட்டுச் சிற்பத்திற்கும் நமது நாட்டுச் சிற்பத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைக் கூறுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பரங்குன்றத்துச் சுவர் ஓவியம்-குறிப்பு வரைக.

13. (அ) பரிபாடலும் இசையும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தோல்கருவிகள் குறித்து எழுதுக.

14. (அ) கூத்து நூல்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) பலவகை முகம் பற்றி விளக்குக.

15. (அ) சிந்தாமணியில் சொல்லோவியம் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சங்ககால இலக்கியம்-குறிப்பு வரைக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இந்திய நாட்டுக் கோவில் கட்டிடங்களின் பிரிவுகள் எத்தனை? அவற்றை விரிவாக விளக்குக.

17. தென்னிந்த ஓவியம் குறித்துக் கட்டுரைக்க.

18. பல்வேறு இடம், காலங்களில் இசைக்கப்படும் இராகங்கள் பற்றியும் ஆண், பெண் இராகங்கள் பற்றியும் விளக்குக.

19. பதினோரு வகை ஆடல்களை விளக்குக.

20. காவியக்கலை பற்றிக் கட்டுரைக்க.

———————

| F–8769 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE2B |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fifth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – தன் மேம்பாட்டியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நீ அசாதரணமானவன் நூலின் ஆசிரியர் யார்?

2. தன்மேம்பாடு என்றால் என்ன?

3. தாகூரைப் பார்க்க சத்யஜித்ரே எங்கு சென்றார்?

4. பானை பேசுகிறது என்ற தலைப்பில் கவிதை எழுதியவர் யார்?

5. 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்ற கவிஞர் யார்?

6. இளைஞர் தினம் என்றைக்குக் கொண்டாடப்படுகிறது?

7. கருப்பின மக்களுக்கு விடியலைத் தந்த நூல் எது?

8. உலகப் புத்தக நாள் என்று கொண்டாடப்படுகிறது?

9. அலெக்சாண்டரிடம் மீதம் இருந்தது என்ன?

10. 'கதாசப்தசகி' எம்மொழி இலக்கியம்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நீ அசாதாரணமானவன் நூல் எப்படி நம்பிக்கையூட்டுகிறது? விளக்குக.

(அல்லது)

(ஆ) நீ அசாதாரணமானவன் நூலின் சமுதாயவியல் நோக்கினை விளக்குக.

12. (அ) மாணவர்களின் மனநிலையை விவரி.

(அல்லது)

(ஆ) லுடோவிக்கோ அன்டோனியோ முரட்டோரியின் வாழ்வில் நடந்த சம்பவம் யாது?

13. (அ) கடிகாரத்தின் வழி ஆசிரியர் கூறும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) நன்னூல் கூறும் மாணவர் இலக்கணம் பற்றிக் கூறுக.

14. (அ) வைராக்கியத்துடன் இருந்து உலகை மாற்றியவர்கள் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) 'சதுரங்கப் பலகையில் அரிசி' கணக்கினை விளக்குக.

15. (அ) கலீல் ஜிப்ரானின் நம்பிக்கையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கேள்விஞானம் என்றால் என்ன? விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தன்மேம்பாட்டிற்கு நீ அசாதாரணமானவன் நூல் தரும் ஆலோசனைகளை விளக்குக.

17. மாற்றுத் திறனாளிகளின் மகத்துவம் பற்றிக் கட்டுரைக்க.

18. வாழும் போதே வானைத் தொடுவதற்கான வழிமுறைகள் யாவை?

19. மனிதம் நிறைந்த மனிதன் யார் என ஆசிரியர் கூறுகிறார்? விளக்குக.

20. அன்பின் அடையாளமாக உலகம் முழுவதும் யாரைப் போற்றுகின்றனர் விளக்குக.

———————

| F–8770 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA6C1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Sixth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. முல்லைப்பாட்டின் ஆசிரியர் யார்?

2. குறுநீர்க் கன்னல் என்றால் என்ன?

3. நற்றிணைப் பாடல்களின் அடிவரையறை எவ்வளவு?

4. குறிஞ்சி பாடுவதில் வல்ல சங்கப்புலவர் யார்?

5. பாலைக் கலி யாரால் பாடப்பட்டது?

6. அகநானூற்றின் பிரிப்பினைக் கூறுக.

7. பதிற்றுப்பத்து போற்றும் அரசவம்சம் எது?

8. பூவிலைப் பெண்டு யார்?

9. 'ஒரு மீன் சாலினி' யார்?

10. முருகனுக்கு அனலன் கொடுத்து என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) முல்லைத் திணையின் முதல், கருப் பொருள்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'இன்னே வருகுவர்', இன்துணையாளர் – விளக்குக.

12. (அ) பாலை நிலத்துச் சுரவழி உடன் போனாரைக் கண்டு யாது கூறினர் எனப் பதுமனார் உரைக்கிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'நகுமோ தோழி, நறுந்தன் காரே' – விளக்குக.

13. (அ) கலித்தொகை காட்டும் ஏறு தழுவுதல் காட்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) தேர்ப் பாகற்குத் தலைவன் என்ன கூறி, விரைவு படுத்தினான்?

14. (அ) சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனின் குணச்சிறப்பைக் கூறுக.

(அல்லது)

(ஆ) இளஞ்சேட் சென்னியின் சிறப்பினைப் புறநானூறு எங்ஙனம் எடுத்தியம்புகிறது?

15. (அ) செவ்வேளின் பிறப்பினைப் பரிபாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) செவ்வேளின் வீரச்செயலை விவரி.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. முல்லைப் பாட்டில் தலைமக்களது பிரிவின் நிலையை விவரி.

17. குறுந்தொகைப் பாடல் சிறப்பை ஒக்கூர் மாசாத்தியார் பாடல் வழி விளக்குக.

18. கலித்தொகை காட்டும் பழந்தமிழர் பண்பாட்டை விளக்குக.

19. செல்வக்கடுங்கோ வாழியாதனின் வெற்றிச்சிறப்பை விவரி.

20. வையையின் சிறப்பினைப் பரிபாடல் எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

———————

| F–8771 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA6C2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Sixth Semester**

**தமிழ்**

**அணி இலக்கணம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. முத்தகச் செய்யுள் என்றால் என்ன?
2. கௌடநெறி எத்தனை வகைப்படும்?
3. பொருளணிகள் எத்தனை?
4. சிறப்புருவகம் என்றால் என்ன?
5. உவம உருபுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
6. அதிசய உவமை என்றால் என்ன?
7. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.
8. நிறல்நிறத்து இயற்றுவது என்ன அணி?
9. ஒட்டணி என்றால் என்ன?
10. பாவிகம் எதன் பண்பு?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொடர்நிலைச் செய்யுளின் வகைகளை விவரி.

(அல்லது)

(ஆ) பெருங்காப்பியப் பண்பை விளக்குக.

12. (அ) தன்மையணியை விளக்கிச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) உருவக அணியை விளக்குக.

13. (அ) உவம வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) உவமை உருபுகளைப் பட்டியலிடுக.

14. (அ) பின்வருநிலையணி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆர்வ மொழியணியை விளக்குக.

15. (அ) தன்மேம்பாட்டுரை அணியை விளக்குக.

(அல்லது)

(ஆ) விசேடவணி என்றால் என்ன? விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தண்டியலங்காரம் கூறும் செய்யுள் வகைகள் யாவை? விளக்குக.

17. தீவக அணியை விளக்கி, வகைகளைச் சான்றுடன் தருக.

18. உவம அணியே ஏனைய அணிகளுக்குத் தாய் என்பதனை நிறுவுக.

19. ஒட்டணி, பரியாய அணி இரண்டின் வேறுபாடு தோன்ற விளக்குக.

20. பாவிக அணி, சங்கரண அணிகளைப் புறநடைக்கு அப்பால் வைத்த காரணம் யாது? விளக்குக.

———————

| F–8772 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTA6C3 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

**தமிழ்**

**இலக்கியத் திறனாய்வு**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிருவரிகளில் விடை தருக.

1. திறனாய்வின் வகைகளைக் கூறுக.

2. இலக்கிய ஆய்வு பற்றிய இரண்டு உண்மைகளை எழுதுக.

3. இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் பாலமாக அமைந்துள்ள அணுகுமுறை யாது?

4. உளவியல் திறனாய்வின் நோக்கம் என்ன?

5. படைப்பிலக்கியத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ள திறனாய்வினைக் கூறுக.

6. உருவவியல் திறனாய்வின் பண்புகளை எழுதுக.

7. பாஞ்சாலி சபதத்தில் பின்பற்றப்பட்டுள்ள திறனாய்வினை எடுத்துக் கூறுக.

8. வாழ்வியலை எடுத்துக்கூறும் திறனாய்வின் வகைகளை எழுதுக.

9. தத்துவநெறி திறனாய்வின் பாடுபொருள்களைக் குறிப்பிடுக.

10. பெண்ணியத் திறனாய்வினை வரையறுக்க.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடைதருக.

11. (அ) திறனாய்வாளனின் தகுதிகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) ஒப்பீட்டுமுறை மற்றும் மதிப்பீட்டுத் திறனாய்வு பற்றி குறிப்பு வரைக.

12. (அ) இலக்கிய வடிவங்களில் வரலாற்றுச்சூழல் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழியியல் அணுமுறையில் புதைவடிவமும் புறவடிவமும் பற்றி குறிப்பு வரைக.

13. (அ) பின் நவீனத்துவத்தில் முதலாளித்துவ சித்திரிப்பினை சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அழகியல் திறனாய்வின் பண்புகளை எடுத்தியம்புக.

14. (அ) தேவாரம், பெரியபுராணம் உள்ளிட்ட பக்தி இலக்கியங்களில் அறங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளதை திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) தொல்படிமவியல் திறனாய்வின் பண்புகளையும் பன்முக செயற்பாட்டினையும் விளக்குக.

15. (அ) தலித்தியத் திறனாய்வில் வாழ்வியல் உணர்வுகளின் பன்முக நிலைப்பாட்டினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியரின் இலக்கியத் திறனாய்வுக் கொள்கையினை சான்று தந்து விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **<u>மூன்று</u>** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. திறனாய்வாளனும் திறனாய்வும் குறித்து கட்டுரை வரைக.

17. இலக்கியம் என்பது சமுதாயத்தின் புலப்பாடு என்பதை சமுதாயவியல் திறனாய்வு வழி நிறுவுக.

18. பின்னை நவீனத்துவத்தின் வழிமுறைகளையும் நிலைப்பாட்டினையும் தொகுத்துரைக்க.

19. அகப்புறத் திணைகள் பற்றி திட்டமிட்டுக்கூறும் தொல்காப்பிய தொல்படிமங்களைத் திறனாய்க.

20. தத்துவத்தின் அடித்தளத்தில் அமைந்துள்ள கலையியல் உதாரணங்களைத் தொகுத்தெழுதுக.

———————

| F–8773 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE3A |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – சிந்தனையியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிருவரிகளில் விடையளிக்க.

1. ‘பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்’ - இத்தொடரின் பொருள் நுணுக்கம் தருக.

2. ஒப்புரவுச் செல்வர்களாக வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

3. திருக்குறளை எத்தகைய கண்காட்சிச் சாலையாக வ.சுப. மாணிக்கம் உருவகிக்கிறார்?

4. கல்வியை எங்ஙனம் கற்க வேண்டும் என வள்ளுவர் வற்புறுத்துகிறார்?

5. அறிவுடையார், அறிவிலார் - இருவருக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?

6. அல்லல்பட்டு அழுவாரின் கண்ணீர் எத்தகைய வலிமை வாய்ந்தது?

7. ‘குடும்பம்’ என்ற சொல்லுக்கு வரையறை தருக.

8. முறை செய்து காப்பாற்றும் மன்னவனை மக்கள் ‘இறை’ என்றழைக்கக் காரணம் யாது?

9. சினத்தின் இயல்பு யாது?

10. நாவைக் காக்கவில்லை என்றால் ஏற்படும் தீய விளைவு யாது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒருபக்க</u> அளவில் விடைதருக.

11. (அ) சிறந்த மக்கட் பண்பான நன்றி உணர்ச்சியைக் காப்பது எங்ஙனம்?

(அல்லது)

(ஆ) வள்ளுவர் சுட்டும் சாதி, மதம், நாடு பற்றிய பொதுமைக் கருத்துக்களைச் சுட்டுக.

12. (அ) பொருள் ஈதலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பொருளைத் தூய்க்கும் முறை குறித்து வள்ளுவர் கூறும் வழி குறித்து ஆராய்க.

13. (அ) 'வறுமையில் செம்மை' நெறிகுறித்து வள்ளுவர் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பசியாற்றலின் அவசியத்தை வள்ளுவர் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

14. (அ) 'புலவி நுணுக்கம்' - சிறுகுறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ஒரு நாட்டை ஆளும் அரசனுக்கு வேண்டிய ஆளுமைகளை எடுத்துரைக்க.

15. (அ) ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வள்ளுவம் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'சான்றாண்மை' குறித்து வள்ளுவர் வழி விளக்குக.

பகுதி இ $(3 \times 10 = 30)$

**எவையேனும்** மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. 'வள்ளுவரின் நெஞ்சம்' - குறித்துக் கட்டுரைக்க.

17. 'பொருட்பயனிலை' குறித்து வள்ளுவம் வழி ஆராய்க.

18. அறிவுக்கல்வி குறித்து வள்ளுவர் உரைக்கும் கருத்துக்களைத் தொகுத்தளிக்க.

19. வள்ளுவர் குறிப்பிடும் அரசுமுறை குறித்து ஆராய்க.

20. ஆசான் கருத்துரையில் இடம்பெறும் திருக்குறள் நுணுக்கங்களை எடுத்துரைக்க.

| F–8774 |
|---|

| Sub. Code |
|---|
| 7BTAE3B |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Sixth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம்: சுற்றுலாவியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிருவரிகளில் விடையளிக்க.

1. சீனப்பயணி யுவான் சுவாங் குறிப்புவரைக.

2. சுற்றுலாவின் நன்மைகள் யாவை?

3. சுற்றுலாப் பயணி என்போர் யார்?

4. கடவுச்சீட்டு என்றால் என்ன?

5. சுற்றுச் சூழல் சுற்றுலா என்றால் என்ன?

6. உலக விடுதிக்கழகம் பற்றி எழுதுக.

7. எல்லோராக்குகைகளின் சிறப்பைப் கூறு.

8. இந்திய மலை இரயில்கள் யாவை?

9. தமிழ்நாட்டின் கடற்கரைச் சுற்றுலாத்தலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

10. சுற்றுலாத்துறையின் வேலை வாய்ப்பைப் பற்றி கூறு.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடைதருக.

11. (அ) சுற்றுலாவின் பிரிவுகளைப் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாவினால் ஏற்படும் பயன்கள் யாவை?

12. (அ) சுற்றுலாப் பயணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விடுதிகள் பற்றி எழுதுக.

13. (அ) உலகச் சுற்றுலாக் கழகம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பசிபிக் பகுதி சுற்றுலாக் கழகம் குறித்து எழுதுக.

14. (அ) கலை பண்பாட்டு விழா பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மனாஸ் வனவிலங்கு சரணாலயம் குறித்து எழுதுக.

15. (அ) கடற்கரைச் சுற்றுலாத் தலங்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) விடுதிகளில் காணப்படும் வேலை வாய்ப்பைக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சுற்றுலாவின் தோற்றம் குறித்து விளக்குக.

17. சுற்றுலா மேற்கொள்ள விரும்பும் பயணிகள் அறிந்து கொள்ள வேண்டியவை யாவை?

18. சுற்றுலாவின் வகைகளை விவரி?

19. உலக நாடுகளின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் குறித்து எழுதுக.

20. சுற்றுலாவை மேம்படுத்த உதவும் கல்விநிலை பற்றி விளக்குக.